# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 24 ஆம் திகதிய*
## *பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2023.03.24 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## *பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தம்)*

***1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 40.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## *சட்டப்பயன் பற்றிய கூற்று*

***வாசகம் 2*** : இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) *1988* ஆம் ஆண்டின் *40* ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தின் *2* ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது பின்வருமாறாகும்:-

(அ) குதிரைப் பந்தயப் பணயக்காரர் என்ற தொழிலை அல்லது சூதாட்டத் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற ஆட்களிடமிருந்து முழுமொத்தச் சேகரிப்பின்மீதான அறவீட்டை அதிகரிப்பதாகும்;

(ஆ) ஐம்பது ஐக்கிய அமெரிக்க டொலரென்ற கெசினோ நுழைவு அறவீடொன்றை விதிப்பனவு செய்வதன் மூலம் சூதாட்டத் தொழிலிடமொன்றினுள் இலங்கைப் பிரசையொருவர் நுழைவதனை விலக்குவதாகும்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின்கீழான அறவீடுகளைச் சேகரிப்பதற்கும் செலுத்துவதற்கும் தவறுகின்ற ஆளொருவரின் பொறுப்புக்கு ஏற்பாடுசெய்வதாகும்.

***வாசகம் 3*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது சூதாட்டத் தொழிலையும் குதிரைப் பந்தயப் பணயக்காரர் என்ற தொழிலையும் கொண்டுநடாத்துகின்ற ஆளொருவர் தொடர்பில் உரிமமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான தேவைப்பாட்டுக்காகவும் உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தில் பதிவுசெய்வதற்காகவும் ஏற்பாடுசெய்வதாகும்.

***வாசகம் 4*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் *4* ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது பின்வருமாறாகும்-

(அ) வேறு அறவீடுகளுக்காக ஏற்பாடுசெய்யப்பட்டவாறு முழுமொத்தச் சேகரிப்பின்மீதான அறவீட்டினதும் தவணைப் பணங்களின்மீதான, கெசினோ நுழைவு அறவீட்டினதும் கொடுப்பனவுகளுக்காக ஏற்பாடுசெய்வதாகும்; அத்துடன்

(ஆ) *3* ஆம் வாசகத்தின் ஏற்புடைமைக்கு விளைவாந்தன்மையினவாகவுள்ள *2017* ஆம் ஆண்டின் *24* ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் குறித்தசில ஏற்பாடுகளின் ஏற்புடைமையை நீடிப்பதாகும்.

***வாசகம் 5*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் *5* ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, முதன்மைச் சட்டவாக்கத்தின் *4* ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவுடன், வரி அறவிடுதல், கட்டிடங்களையும், இடங்களையும், தொழில் வளவுகளையும் சோதனை செய்வதற்கான தத்துவம், அலுவலகமுறையான இரகசியம் என்பன தொடர்பில் *1981* ஆம் ஆண்டின் *69* ஆம் இலக்க, மொத்தவிற்பனை வரவுவரிச் சட்டத்தின் குறித்தசில ஏற்பாடுகளின் ஏற்புடைமைக்காக ஏற்பாடுசெய்வதாகும்.

***வாசகம் 6*** : இவ்வாசகம், குதிரைப் பந்தயப் பணயக்காரர், கெசினோ, இலங்கைப் பிரசை அத்துடன் ஆணையாளர் தலைமையதிபதியும் பிரதி ஆணையாளரும் எனும் சொற்களையும் சொல்லமைப்புகளையும் புதிய வரைவிலக்கணங்களாக உட்புகுத்துவதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் *7* ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 7*** : இவ்வாசகம், குதிரைப் பந்தயப் பணயக்காரர் என்ற தொழிலை அல்லது சூதாட்டத் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற ஆளொருவரினால் *2023*, ஏப்பிறல் *1* ஆந் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்காகவும் குறித்தசில அறவீடுகளுக்காகச் செலுத்தப்படவேண்டிய அதிகரித்த தொகைகளைக் குறித்துரைப்பதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணையை மாற்றீடு செய்கின்றது.

## பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தம்)

ச.வ-ஓ. 17/2022

### 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2.** இரண்டாயிரத்துப் பதினைந்தாமாண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதும் (இதனகத்துப்பின்னர், ‘‘முதன்மைச் சட்டவாக்கம்’’ எனக் குறிப்பீடுசெய்யப்படுவதுமான) 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், ‘‘ஐந்து சதவீதத்திலான அறவீடு ஒன்று; அல்லது’’ என்னும் சொற்களுக்குப் பதிலாக, ‘‘ஐந்து சதவீதத்திலான அறவீடு ஒன்று;’’ என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், ‘‘2015 சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் ஆண்டுக்கு பத்து சதவீதத்திலான அறவீடு ஒன்று.’’; என் னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ‘‘2015 சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஆனால்

2023, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் ஆண்டுக்குப் பத்து சதவீதத்திலான அறவீடு ஒன்று; அல்லது''; என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன்மூலமும்:-

''(இ) 2023, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் ஆண்டுக்குப் பதினைந்து சதவீதத்திலான அறவீடு ஒன்று;'';

(ஈ) அவ்வுட்பிரிவில், ''மொத்த சேகரிப்புமீது'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''(இதனகத்துப் பின்னர், ''மொத்தச் சேகரிப்பு அறவீடு'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) மொத்தச் சேகரிப்புமீது'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(உ) அவ்வுட்பிரிவுக்கான முதலாவது காப்புவாசகத்தில், ''2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச்சட்டத்தின்கீழ் சேர்பெறுமதி வரியினை செலுத்துவதற்கு அல்லது 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தின்கீழ் நாட்டைக் கட்டியெழுப்புதல் வரியைச் செலுத்துவதற்கு'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச்சட்டத்தின்கீழ் சேர்பெறுமதி வரியினைச் செலுத்துவதற்கு அல்லது 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தின்கீழ் நாட்டைக் கட்டியெழுப்புதல் வரியைச் செலுத்துவதற்கு அல்லது 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தின்கீழ் சமூகப்

பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டைச் செலுத்துவதற்கு” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (1அஅ) என்னும் உட்பிரிவில், “2015 சனவரி 1 ஆந் தேதியன்று” என்னும் சொற்களிலிருந்து, “சேகரித்தல் வேண்டும்:” என்பது வரையிலான சொற்களையும் எண்களையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்:-

“(1அஅ) சூதாட்டத் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற ஆள் ஒவ்வொருவரும் (இதனகத்துப்பின்னர், “கெசினோ நுழைவு அறவீடு” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அறவீடொன்றைச் சேகரித்தல் வேண்டுமென்பதுடன் 4 ஆம் பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வோர் இயைபான தவணைப்பணத்துக்காகவும் இப்பிரிவின் (1ஆ) என்னும் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய அறவீட்டை ஆணையாளர் தலைமையதிபதிக்குப் பின்வருமாறு செலுத்துதலும் வேண்டும்:-

(அ) 2015, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற, ஆனால் 2023, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற, ஏதேனும் காலப்பகுதிக்கு அத்தகைய சூதாட்டத் தொழிலிடத்தினுள் நுழைகின்ற எவரேனுமாளிடமிருந்து நூறு ஐக்கிய அமெரிக்க டொலர்களை அல்லது வேறேதேனும் மாற்றத்தகு வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை நாணயத்தில் அதற்குச் சமமானதைக் கொண்ட ஒரு கெசினோ நுழைவு அறவீடு; அத்துடன்

(ஆ) 2023, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு அத்தகைய சூதாட்டத் தொழிலிடத்தினுள் நுழைகின்ற இலங்கைப் பிரசையாகவுள்ள எவரேனு மாளிடமிருந்து ஐம்பது ஐக்கிய அமெரிக்க டொலர்களை அல்லது வேறேதேனும் மாற்றத்தகு வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை நாணயத்தில் அதற்குச் சமமானதைக் கொண்ட ஒரு கெசினோ நுழைவு அறவீடு:" ;

(3) அப்பிரிவின் (1ஆ) என்னும் உட்பிரிவில் -

(அ) "(1அ) என்னும் உட்பிரிவின்கீழ் மற்றும் (1அஅ) என்னும் உட்பிரிவின்கீழ் அறவீட்டைச் செலுத்துவதற்கு ஆளாகியுள்ள ஒவ்வொரு ஆளும்-" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "(1அ) என்னும் உட்பிரிவின்கீழ் மொத்தச் சேகரிப்பு அறவீட்டைச் செலுத்துவ தற்குப் பொறுப்பாகவுள்ள ஒவ்வோர் ஆளும் (1அஅ) என்னும் உட்பிரிவின்கீழ் கெசினோ நுழைவு அறவீட்டைச் சேகரித்துச் செலுத்து வதற்குப் பொறுப்பாகவுள்ள ஒவ்வோர் ஆளும்-" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "அறவீடுகளை அனுப்புதல் வேண்டும்."; என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அறவீடுகளை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துதல் வேண்டும்."; என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(4) அப்பிரிவின் (1இ) என்னும் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

“(1இ) (அ) உட்பிரிவுகள் (1) மற்றும் (1அ) என்பவற்றிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அறவீடுகளைச் செலுத்துவதற்கும் உட்பிரிவு (1அஅ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட கெசினோ நுழைவு அறவீட்டைச் சேகரித்துச் செலுத்துவதற்கும் பொறுப்பாகவுள்ள எவரேனுமாள் விதிக்கப்பட்ட அத்தகைய அறவீடுகளைச் சேகரித்துச் செலுத்துவதற்குத் தவறுமிடத்து, ஏற்புடையற்பாலவாறு, 4 ஆம் பிரிவின் உட்பிரிவுகள் (2), (3), (4), (5), (5அ) மற்றும் (6) என்பவற்றின் ஏற்பாடுகள் அத்தகைய தவறுதல் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) உட்பிரிவு (1அஅ) வின்கீழ் அறவீட்டைச் சேகரித்தல் மற்றும் செலுத்துதல் தொடர்பான முறையும் நடவடிக்கைமுறையும் அமைச்சரினால் விதித்துரைக்கப்படலாம்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவைத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலமும்:-

“(1அ) இரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட சூதாட்டத் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற ஒவ்வோராளும், 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராதல் வேண்டுமென்பதுடன்

அத்தகைய உரிமம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் உண்ணாட்டரசிறைத் திணைக் களத்தில் பதிவுசெய்தலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், சூதாட்டத் தொழிலுக்காக 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய உரிமத்தைப் பெற்றுக் கொண்டுள்ளவரும் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்குமுன்னர் உண்ணாட்டரசிறைத் திணைக் களத்தில் பதிவுசெய்யப்படாதவருமான எவரேனு மாள் அத்தகைய நடைமுறைக்குவருகின்ற தேதியி லிருந்து ஒருமாதத்தினுள் உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தில் பதிவுசெய்தல் வேண்டும்:

ஆயின், மேலும், இப்பிரிவின் நோக்கத்துக்காகச் சூதாட்டத் தொழிலானது ஒரு கெசினோவில் சூதாட்ட வாய்ப்புக்களை வழங்குகின்றமையை உட்படுத்துதல் வேண்டும்.

(1ஆ) இரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட குதிரைப் பந்தயப் பணயக் காரர் என்ற தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற ஒவ்வோராளும், தொழிலைத் தொடங்கியதிலிருந்து ஒருமாதத்தினுள் உண்ணாட்டரசிறைத் திணைக் களத்தில் பதிவுசெய்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டம் நடை முறைக்கு வருவதற்குமுன்னர் குதிரைப் பந்தயப் பணயக்காரர் என்ற தொழிலைத் தொடங்கியுள்ள வரும் உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்படாதவருமான எவரேனுமாள் அத்தகைய நடைமுறைக்குவருகின்ற தேதியிலிருந்து ஒருமாதத்தினுள் உண்ணாட்டரசிறைத் திணைக் களத்தில் பதிவுசெய்தல் வேண்டும்.''.

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், “(1) ஆம் உட்பிரிவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட” என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, “(1), (1அ) மற்றும் (1ஆ) என்னும் உட்பிரிவுகளின் கீழ் பதிவுசெய்யப்பட்ட” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், “ஓராம் உட்பிரிவின்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “ஓராம், (1அ) மற்றும் (1ஆ) என்னும் உட்பிரிவுகளின்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

“(2) உட்பிரிவுகள் (1), (1அ) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட அறவீடுகளைச் செலுத்துவதற்கும் 2 ஆம் பிரிவின் (1அஅ) என்னும் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட கெசினோ நுழைவு அறவீட்டைச் சேகரித்துச் செலுத்துவதற்கும் பொறுப்பாகவுள்ள எவரேனுமாள் -

(அ) அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்டதும், ஏதேனும் காலப்பகுதிக்காக ஓர் உதவி ஆணையாளரினால் வரிமதிப்பீடு செய்யப்பட்டதும், வரிமதிப்பீட்டறிவித்தலில் குறித்துரைக்கப் பட்ட தேதியன்று அல்லது அதற்குமுன்னர் செலுத்தப்படுவதற்குத் தேவைப்படும்போது, முழுமொத்தச் சேகரிப்பின்மீதான அல்லது அதன் பாகத்தின்மீதான அறவீட்டைச் செலுத்தத் தவறுமிடத்து; அல்லது

(ஆ) இச்சட்டத்திற் குறித்துரைக்கப்பட்ட தேதிகளில் அல்லது தேதிகளுக்குமுன்னர் முறையே உட்பிரிவுகள் (1), (1அ) மற்றும் (1அஅ) என்பவற்றிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அறவீட்டின் ஏதேனும் தவணைப்பணத்தை அல்லது அதன் பாகத்தை அல்லது முழு மொத்தச் சேகரிப்பின்மீதான அல்லது அதன் பாகத்தின்மீதான அறவீட்டைச் செலுத்தத் தவறுமிடத்து அல்லது கெசினோ நுழைவு அறவீட்டைச் சேகரித்துச் செலுத்தத்தவறுமிடத்து,

பந்தி (அ) அல்லது (ஆ) வின்கீழ் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய அறவீடு, அறவீட்டின் தவணைப்பணம் அல்லது அதன் பாகம் தவணைதவறியதாக வருதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அறவீடுகளைச் சேகரித்துச் செலுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ள அத்தகைய ஆள் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தவணைதவறிய ஒருவராக இருத்தலும் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் -

(அ) ''விதிப்பனவின் ஏதேனும் தவணைக் கட்டணமானது தவணைதவறியதாகவுள்ள விடத்து, அத்துடன் -'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "முறையே 2 ஆம் பிரிவின் உட்பிரிவுகள் (1), (1அ) மற்றும் (1அஅ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட அறவீட்டின் ஏதேனும் தவணைப்பணம் அல்லது அதன் பாகம் அல்லது மொத்தச் சேகரிப்பு அறவீடு அல்லது அதன் பாகம் அல்லது கெசினோ நுழைவு அறவீடு தவணைதவறியதாகவுள்ளவிடத்து, அத்துடன் -" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், ''தவணைதவறியமை, 1988 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனால் 2001 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் ஆண்டிற் செலுத்தப்படற்பாலதான தவணைக் கட்டணமொன்று தொடர்பிலானதாக விருக்குமிடத்து,'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''தவணைதவறியமை, 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் 1988 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர், ஆனால் 2001 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதிக்குமுன்னர் தொடங்குகின்ற ஏதேனும் ஆண்டிற் செலுத்தப்படற்பாலதான அறவீட்டின் தவணைப்பணமொன்று தொடர்பிலானதாகவிருக்குமிடத்து,'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், ''தவணைதவறியமை, 2001 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் ஆண்டிற் செலுத்தப்படற்பாலதான தவணைக்கட்டணமொன்று தொடர்பிலானதாகவிருக்குமிடத்து,'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''தவணைதவறியமை, 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் 2001 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் ஆண்டிற் செலுத்தப்படற்பாலதான அறவீட்டின் தவணைப்பணமொன்று தொடர்பிலானதாகவிருக்குமிடத்து,'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:-

“(இ) தவணைதவறியமை, 2 ஆம் பிரிவின் (1அ) மற்றும் (1அஅ) என்னும் உட்பிரிவுகளின்கீழ் செலுத்தப்படற்பாலனவான அறவீடுகள் தொடர்பிலானதாகவிருக்குமிடத்து, தவணை தவறியவர், தவணைதவறியதாகவுள்ள அறவீட்டுடன் சேர்த்து மேலதிகமாக –

(i) அத்தகைய அறவீட்டின் பத்துசதவீதத்துக்குச் சமமான பணத்தொகையிலான தண்டமொன்றைச் செலுத்துதல் வேண்டும்; அத்துடன்.

(ii) அத்தகைய அறவீடு தவணைதவறியதாகவிருப்பதற்கு ஆரம்பிக்கின்ற நேரத்திலிருந்து முப்பதுநாட்கள் முடிவுறு முன்னர் செலுத்தப்படாதவிடத்து, அது தவணைதவறியதாகவிருக்கின்ற முப்பது நாட்களைக் கொண்ட அல்லது அதன் பாகத்தைக் கொண்ட ஒவ்வொரு மேலதிகக் காலப்பகுதி தொடர்பிலும் தவணை தவறியதாகவுள்ள அறவீட்டின் பத்துசதவீதத்துக்குச் சமமானவொரு பணத்தொகையிலான மேலதிகத் தண்டமொன்றைச் செலுத்துதல் வேண்டும்:

ஆயின், இப்பந்தியின்கீழ் தண்டமொன்றாகச் செலுத்தப்படற்பாலதான மொத்தத் தொகை தவணைதவறிய அறவீட்டின் ஐம்பது சத வீதத்தை எவ்விடயத்திலும் விஞ்சுதலாகாது.”;

(4) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், “அத்தகைய தண்டத்துடன் தவணைதவறிய ஏதேனும் தவணைக்கட்டணமானது” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “அத்தகைய தண்டத்துடன், தவணைதவறியதாகவுள்ள முறையே, விடயத்துக்கேற்ப, 2 ஆம் பிரிவின் உட்பிரிவுகள் (1), (1அ)

*மற்றும் (1அஅ) என்பவற்றிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அறவீட்டின் ஏதேனும் தவணைப்பணமானது அல்லது அதன் பாகம் அல்லது மொத்தச் சேகரிப்பின்மீதான அல்லது அதன் பாகத்தின்மீதான அறவீடு அல்லது கெசினோ நுழைவு அறவீடு தவணைதவறிய ஆளிட மிருந்து அறவிடப்படலாம்.'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;*

(5) *அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும்:-*

*"(5அ) உட்பிரிவு (5) இன் ஏற்பாடுகளுடன் சேர்த்து மேலதிகமாக, முறையே நிருவாக ஏற்பாடுகள், பதிவேடு வைத்திருத்தல் மற்றும் தகவற் சேகரிப்பு, வரி விபரத்திரட்டுக்கள், வரிமதிப்பீடுகள், ஆட்சேபனை மற்றும் மேன்முறையீடுகள், வரிக்கான பொறுப்பும் வரிசெலுத்துதலும், வட்டி, வரி அறவிடுதல், தண்டங்கள், குற்றவியல் வழக்குநடவடிக்கைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் பொருள்கோடல் என்பன தொடர்பாக 2018, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற இயைபான வரிமதிப்பீட்டாண்டுக்காக, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அத்தியாயங்கள்* IX, X, XI, XII, XIII, XIV, XV, XVI, XVII, XVIII, XIX *மற்றும்* XX *என்பவற்றின் ஏற்பாடுகள், முறையே இச்சட்டத்தின்கீழான நிருவாக ஏற்பாடுகள், பதிவேடு வைத்திருத்தல் மற்றும் தகவற் சேகரிப்பு, வரி விபரத்திரட்டுக்கள், வரிமதிப்பீடுகள், ஆட்சேபனை மற்றும் மேன்முறையீடுகள், வரிக்கான பொறுப்பும் வரிசெலுத்துதலும், வட்டி, வரி அறவிடுதல், தண்டங்கள், குற்றவியல் வழக்குநடவடிக்கைகள், ஒழுங்கு விதிகள் மற்றும் பொருள்கோடல்கள் என்பவற்றுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.";*

(6) *இரண்டாயிரத்துப் பதினைந்தாமாண்டின் 14 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட (6) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும்.*

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், “உண்ணாட்டர சிறைச் சட்டத்தின் 190 ஆம் பிரிவின்கீழ்” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “மொத்த விற்பனை வரவுவரிச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின்கீழ்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், “உண்ணாட்டர சிறைச் சட்டத்தின் 214 ஆம் பிரிவின்கீழ் அல்லது 215 ஆம் பிரிவின்கீழ்” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “மொத்த விற்பனை வரவுவரிச் சட்டத்தின் 42 ஆம் பிரிவின்கீழ் அல்லது 43 ஆம் பிரிவின்கீழ்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூல மும்;

(3) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், “உண்ணாட்டர சிறைச் சட்டத்தின் 209 ஆம் பிரிவின்கீழ்” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “மொத்த விற்பனை வரவுவரிச் சட்டத்தின் 57 ஆம் பிரிவின்கீழ்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூல மும்;

(4) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில், “உண்ணாட்டர சிறைச் சட்டத்தின் 209 ஆம் பிரிவின்கீழ்” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “மொத்த விற்பனை வரவுவரிச் சட்டத்தின் 57 ஆம் பிரிவினது” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூல மும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தாற் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது:-

(1) ''குதிரைப் பந்தயப் பணயக்காரர்'' என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

''குதிரைப் பந்தயப் பணயக்காரர்'' என்பது, இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே நடாத்தப்படுகின்ற அல்லது நடாத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்படுகின்ற குதிரையோட்டங்களின்மீது அல்லது நடாத்தப்படவுள்ள அல்லது நடாத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்படும் ஏதேனும் விளையாட்டு நிகழ்ச்சியின்மீது-

(அ) நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல்;

(ஆ) காசாக அல்லது கடனாக; அல்லது

(இ) இணையத்தளத்தினூடாக,

பந்தயங்களைப் பெறுகின்ற அல்லது பேச்சுவார்த்தைமூலம் ஏற்பாடுசெய்கின்ற ஆளொருவர் என்று பொருளாகும்;

(2) "ஆணையாளர் தலைமையதிபதி" மற்றும் "பிரதி ஆணையாளர்'' என்ற சொல்லமைப்புகளின் வரைவிலக்கணங்களை நீக்குவதன்மூலமும்;

(3) ''தொழில்'' என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும்:-

"கெசினோ'' என்பது, 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்)

சட்டத்தின்கீழ் அத்தகைய சொல்லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“இலங்கைப் பிரசை” என்பது, (349 ஆம் அத்தியாயமான) பிரசாவுரிமைச் சட்டத்தின்கீழ் இலங்கையின் பிரசாவுரிமை அந்தஸ்தையுடைய ஆளொருவர் என்று பொருளாகும்;

“ஆணையாளர் தலைமையதிபதி” மற்றும் “பிரதி ஆணையாளர்” என்பன, மொத்த விற்பனை வரவுவரிச் சட்டத்தின் 59 ஆம் பிரிவினால் அத்தகைய சொல்லமைப்புகளுக்குக் குறித்தளிக்கப்பட்ட அதேபொருள்களைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(4) “சூதாட்டம்” என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் “தனியாட்கள் அணுகக்கூடிய அளவுகளில்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “நேரடியாக அல்லது இணையத்தளத்தினூடாகத் தனியாட்கள் அணுகக்கூடிய வளவுகளில்” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

7. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணையை மாற்றீடு செய்தல்

"அட்டவணை

பாகம் I

[பிரிவு 2]

இதற்கான நிரை I இல் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வோராண்டுக்கும் சூதாட்டத் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற ஆளொருவரினால் செலுத்தப்படற்பால தான அறவீட்டுத் தொகை, இதற்கான நிரை II இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட தொகைக்குச் சமமானதாக இருத்தல் வேண்டும்-

| நிரை I | நிரை II |
|---|---|
| ஆண்டு | அறவீட்டின் தொகை |
| 1. குதிரைப் பந்தயப் பணயக்காரர் என்ற தொழிலைக் கொண்டுநடாத்துவதற்காக 1988, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால், 2001, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் | ஒரு இலட்சம் ரூபா |
| 2. குதிரைப் பந்தயப் பணயக்காரர் என்ற தொழிலைக் கொண்டுநடாத்துவதற்காக 2001, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால், 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் | பத்து இலட்சம் ரூபா |
| 3. 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால், 2005, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கு கின்ற ஒவ்வோராண்டுக்கும் - | |
| (i) நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன் படுத்தப்பட்டு | முப்பதாயிரம் ரூபா |
| (ii) நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன் படுத்தப்படாமல் | பத்தாயிரம் ரூபா |
| குதிரைப் பந்தயப் பணயக்காரர் என்ற தொழில் நிறைவேற்றப்படுமிடத்து. | |

| நிரை I | நிரை II |
|---|---|
| ஆண்டு | அறவீட்டின் தொகை |
| 4. 2005, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால், 2006, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் - | |
| (i) ஒரு முகவரினூடாக | பத்து இலட்சம் ரூபா |
| (ii) நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்தப்பட்டு | இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா |
| (iii) நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்தப்படாமல் | இருபத்தையாயிரம் ரூபா |
| குதிரைப் பந்தயப் பணயக்காரர் என்ற தொழில் நிறைவேற்றப்படுமிடத்து. | |
| 5. 2006, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால், 2013, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும்- | |
| (i) ஒரு முகவரினூடாக | பத்து இலட்சம் ரூபா |
| (ii) நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்தப்பட்டு | மூன்று இலட்சம் ரூபா |
| (iii) நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்தப்படாமல் | ஐம்பதினாயிரம் ரூபா |
| குதிரைப் பந்தயப் பணயக்காரர் என்ற தொழில் நிறைவேற்றப்படுமிடத்து. | |
| 6. 2013, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால், 2013, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும்- | |
| (i) ஒரு முகவரினூடாக | இருபது இலட்சம் ரூபா |
| (ii) நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்தப்பட்டு | மூன்று இலட்சம் ரூபா |
| (iii) நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்தப்படாமல் | இருபத்தையாயிரம் ரூபா |
| குதிரைப் பந்தயப் பணயக்காரர் என்ற தொழில் நிறைவேற்றப்படுமிடத்து. | |

| | |
|---|---|
| 7. 2015, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற, ஆனால், 2023, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஒவ்வோராண்டுக்கும்- | |
| (i) ஒரு முகவரினூடாக | நாற்பது இலட்சம் ரூபா |
| (ii) நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன் படுத்தப்பட்டு | ஆறு இலட்சம் ரூபா |
| (iii) நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன் படுத்தப்படாமல் | ஐம்பதினாயிரம் ரூபா |
| குதிரைப் பந்தயப் பணயக்காரர் என்ற தொழில் நிறைவேற்றப்படுமிடத்து. | |
| 8. 2023, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும்- | |
| (i) ஒரு முகவரினூடாக | ஐம்பது இலட்சம் ரூபா |
| (ii) நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன் படுத்தப்பட்டு | பத்து இலட்சம் ரூபா |
| (iii) நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன் படுத்தப்படாமல் | எழுபத்தையாயிரம் ரூபா |
| குதிரைப் பந்தயப் பணயக்காரர் என்ற தொழில் நிறைவேற்றப்படுமிடத்து. | |

பாகம் II

இதற்கான நிரை I இல் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வோராண்டுக்கும் சூதாட்டத் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற ஆளொருவரினால் செலுத்தப்படற்பாலதான அறவீட்டின் தொகை, இதற்கான நிரை II இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட தொகைக்குச் சமமானதாக இருத்தல் வேண்டும்-

| *நிரை I* | *நிரை II* |
|---|---|
| *ஆண்டு* | *அறவீட்டின் தொகை* |
| 1. சூதாட்டத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக 1988, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால், 2001, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் | பத்து இலட்சம் ரூபா |

| நிரை I | நிரை II |
|---|---|
| ஆண்டு | அறவீட்டின் தொகை |
| 2. சூதாட்டத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக 2001, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால், 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் | இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா |
| 3. 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால், 2005, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர்- | |
| (i) சூதாட்டத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக (ருட்ஜினோ விளையாடுதல் தவிர) | ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபா |
| (ii) ருட்ஜினோ மட்டுமே விளையாடுதல் என்னும் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக | ஐந்து இலட்சம் ரூபா |
| 4. ருட்ஜினோ விளையாடுதலுட்பட சூதாட்டத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்காக, 2005, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால், 2013, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் | ஐந்து கோடி ரூபா |
| 5. ருட்ஜினோ விளையாடுதலுட்பட சூதாட்டத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்காக, 2013, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால், 2015, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் | பத்துக்கோடி ரூபா |
| 6. ருட்ஜினோ விளையாடுதலுட்பட சூதாட்டத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்காக, 2015, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற, ஆனால் 2023 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஒவ்வோராண்டுக்கும் | இருபது கோடி ரூபா |
| 7. ருட்ஜினோ விளையாடுதலுட்பட சூதாட்டத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்காக 2023 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் | ஐம்பது கோடி ரூபா |

.”.

**8**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*